996 ஆகஸ்ட் 20]

(அ) இல்லை.

(ஆ) எழாது.

15--

OVER HEAD TANKS

Question No. 33--**Thiru B. Venkatasamy**--Will the Hon. the Minister or Rural Development and Local Administration be pleased to state--

(a) The number of over head tanks constructed in Hosur and Shoolagiri blocks in Dharmapuri District so far; and

(b) How many of them have been handed over to Panchayat Unions?

விடை:

மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): ஒசூர் ஒன்றியத்தில் 70 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும் சூளகிரி ஒன்றியத்தில் 88 நீர்த்தேக்கத் தொட்டிகளும், கட்டப்பட்டுள்ளன. இவைகளில் ஒசூர் ஒன்றியத்தில் 65 நீர்த்தேக்கத் தொட்டிகளும் சூளகிரி ஒன்றியத்தில் 85 நீர்தேக்கத் தொட்டிகளும் ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

16--

கொடிவேரி கூட்டுக்குடிநீர் திட்டத்தின் மதிப்பீடு

வினா எண் 137--**திரு. நா. பெரியசாமி**--மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பெருந்துறை தொகுதி-ஊத்துக்குளி-குன்னத்தூர் பகுதிகளுக்கு பயனளிக்கும் கொடிவேரி கூட்டுக்குடிநீர்த் திட்டத்தின் மதிப்பீடு என்ன?

(ஆ) இந்தத் திட்டத்தின் மூலம் பயனடையும் வழியோரக் கிராமங்கள் எத்தனை?

TRUTH ALONE TRIUMPHS

விடை:

மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) பெரியார் மாவட்டம், பெருந்துறை தொகுதியைச் சேர்ந்த கலிங்கேயம், கொளப்பலூர், சிறுவள்ளூர், குன்னத்தூர், ஊத்துக்குளி பேரூராட்சிகள் மற்றும் 20 ஊராட்சிகளுக்கான கூட்டுக்குடிநீர் திட்டத்தின் தீர்மான மதிப்பீடு ரூ. 590.116 இலட்சங்கள் மற்றும் ஆண்டு பராமரிப்பு செலவு ரூ. 20.725 இலட்சங்கள். இத்திட்டத்திற்கான ஒப்புதல் 10-12-87 நாளிட்ட வாரிய நடவடிக்கை எண் 329-ல் அளிக்கப்பட்டது.

(ஆ) இத்திட்டத்தின்கீழ் பயனடையும் வழியோரக் கிராமங்கள் 20 ஆகும். (179 குடியிருப்புகள்).

17--

கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு பயன்படும் மின்மோட்டாரின் திறனை அதிகரித்தல்

வினா எண் 139--**திரு. நா. பெரியசாமி**--மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பெருந்துறை-கருமாண்டி-- செல்லிபாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு பயன்படும் மின்மோட்டார் திறன் குறைந்துள்ளதால் அதனை மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை:

மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்:

பெருந்துறை-கருமாண்டி-செல்லிபாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் உள்ள கங்காபுரம் நீர் உந்து நிலையம், மற்றும் வாவிக்கடை நீர் உந்து நிலையங்களில் பல ஆண்டுகளாக இயங்கி வந்த 50 குதிரைத் திறன் மின்மோட்டாருக்குப் பதிலாக 90 குதிரைத்திறன் கொண்ட மின் மோட்டாரை மாற்றுவதற்கு அரசு ரூ. 34.17 இலட்சங்களுக்கு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது.